| உறுதிமொழி #4: சுகாதார துறை அபிவிருத்தியில் குடிமக்கள் பங்குபற்றலுக்கான நிலையான பொறியமைப்பு ஒன்றை ஸ்தாபித்தல். | |
|---|---|
| 1 ஒக்டோபர் 2018 – 30 செப்ரம்பர் 2020 | |
| முன்னணி நடைமுறைப்படுத்தல் நிறுவனம்/செயற்பாட்டாளர் | **சுகாதார அமைச்சு** |
| **உறுதிமொழி விளக்கம்** | |
| உறுதிமொழி அடையாளப்படுத்தப் போகும் பொதுப் பிரச்சினை என்ன? | முதன்மை சுகாதார பராமரிப்பினை வலுப்படுத்துவதற்கான திருத்தங்களை சுகாதார துறை தற்போது முன்னெடுத்துள்ளது. சுகாதார பராமரிப்புக்கான தேவைகளை அடையாளப்படுத்துவதனை இந்த திருத்தங்கள் இலக்காகக் கொண்டுள்ளன. அத்துடன், குடிமக்கள் நெருக்கமான முதன்மை சுகாதார பராமரிப்பு வைத்தியசாலையை அணுகுவதற்கான முறைமை ஒன்றை வடிவமைக்கும். அத்துடன், தமது தேவைகளுக்கு அமைய பொருத்தமான விசேட பராமரிப்பினையும் பெறும். இந்த திருத்தங்களை காண்பதற்கு இந்த செயற்பாட்டில் குடிமக்கள் பங்குபற்ற வேண்டியது அவசியம் என்ற போதிலும்,சுகாதார துறை அபிவிருத்தியில் தற்போது வரையறுக்கப்பட்ட ஈடுபாடே உள்ளது. தகவல்களை பகிர்வதற்கு மற்றும் குடிமக்கள் பின்னூட்டத்தைப் பெறுவதற்கு நிலையான பொறியமைப்பின்மை என்பதே சுகாதார துறை அபிவிருத்தியில் குடிமக்களின் குறைந்தளவு பங்குபற்றலுக்கான முதன்மை காரணமாகும். |
| உறுதிமொழி என்ன? | தமது வெற்றியை உறுதி செய்வதற்கு சுகாதாரத் துறை திருத்தங்களை குடிமக்கள் புரிந்துகொள்ளவும், பங்குபற்றவும் வேண்டும். குடிமக்களை வலுப்படுத்தும் மூலோபாயங்களை வழங்குவதும், நாட்டின் சுகாதார சேவைகள் அபிவிருத்தியில் பங்குபற்றச் செய்வதுமே இந்த உறுதிமொழியின் நோக்கமாகும். இதனை வசதியளிப்பதற்கு,பொது மக்களை ஈடுபடுத்தும் தற்போதுள்ள வலையமைப்புக்கள் மீள விஜயம் செய்யப்படல் வேண்டும். குடிமக்களின் பங்குபற்றலை முறைசார்ந்ததாக்குவதற்கான தொடர்புகளும், தகவல்களை பகிர்வதற்கான தளங்களும் வலுப்படுத்தப்படல் வேண்டும். |
| பொது பிரச்சினையைத் தீர்ப்பதற்கு உறுதிமொழியானது எவ்வாறு பங்களிக்கும்? | பல்வேறு மூலோபாயங்களைப் பயன்படுத்தி சுகாதார துறை அபிவிருத்தியில் பங்குபற்றுவதற்கு குடிமக்கள் வலுப்படுத்தப்படுவர். குடிமக்கள் பங்குபற்றலை முறைசார்ந்ததாக்குவதற்கு குடிமக்கள் குழுக்களுடன் மேலதிக தொடர்புகள் ஏற்படுத்தப்படும். மக்களுக்கு சினேகப்பூர்வமானதாக்குவதற்கு சுகாதார அமைச்சின் இணையத்தளத்தை மேம்படுத்துவது என்பது தகவல்களை எளிதாக அணுகுவதற்கும், பின்னூட்டம் வழங்குவதற்கு குடிமக்களுக்கான மேலதிக சந்தர்ப்பங்களை உருவாக்கும். எளிதில் புரிந்துகொள்ளக் கூடிய சுகாதார தகவல்கள் அடிப்படையிலான ஆதாரங்களையும் இந்த தளம் வழங்கும். மக்களின் சுகாதாரத்திற்கு தடையாக இருக்கக் கூடிய எந்தவொரு தப்பெண்ணங்களையும் இது இல்லாது செய்வதுடன், சுகாதாரம் தொடர்பான மக்களின் அறிவையும் மேம்படுத்தும். நீடித்த சிறுநீரக நோய், மன நலம் மற்றும் மருந்து விநியோக முகாமைத்துவம் என்பன அடையாளங் காணப்பட்டுள்ள முன்னுரிமைப் பகுதிகளாகும். பயனுள்ள பின்னூட்டங்களை வழங்குவதுடன், தமது சுகாதார பழக்க வழக்கங்களை மாற்றுவதற்கும் மக்கள் வலுப்படுத்தப்படலாம். எ.கா. முதன்மை பராமரிப்பினை வலுப்படுத்தல் என்பது, பராமரிப்புக்காக தொடர்பு கொள்ளும் முதலாவது தெரிவு இடமாக முதன்மை பராமரிக்கு வைத்தியசாலை கட்டமைப்பாக உள்ளது. |
| OGP விழுமியங்களுக்கு ஏன் இந்த உறுதிமொழி சம்பந்தப்படுகின்றது? | வெற்றிகரமான வகையில் சுகாதார திருத்தங்கள் நடைமுறைப்படுத்துவதில் குடிமக்களின் பங்குபற்றலை ஊக்குவிப்பதால் **பொது மக்கள் பங்குபற்றலின்** பெறுமதியை இந்த உறுதிமொழி அடையாளப்படுத்துகின்றது. குடிமக்களுக்கு மேலும் அணுகக் கூடிய விதத்தில் சுகாதாரம் சார் தகவல்களை வழங்குவதில் **தகவலுக்கான அணுகும் வசதி**யை அது முன்னிறுத்துகின்றது. |
| மேலதிக தகவல்: | UHC இற்கான சுகாதார சேவை விநியோகத்திற்கான கொள்கையாக திருத்தங்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. |

| சரிபார்க்கக் கூடிய வழங்கக்கூடியவையுடன் மைற்கல் நடவடிக்கை | ஆரம்ப திகதி: | முடிவுத் திகதி: |
|---|---|---|

| | | |
|---|---|---|
| 1. சர்வோதயா மற்றும் மக்கள் சுகாதார முன்னெடுப்பு போன்ற தற்போதுள்ள வலையமைப்புக்களை முறைசார்ந்ததாக்குவதன் ஊடாக சுகாதார மேம்பாட்டிற்கான குடிமக்கள் பங்குபற்றலை ஏதுவாக்குவதற்கு நிலையான பொறியமைப்பு அறிமுகப்படுத்தப்படும். | ஒக்டோபர் 2018 | ஆகஸ்ட் 2019 |
| 2. மக்களுக்கும், தொழில்சார்ந்தவர்களுக்கும் சினேகமான அமைச்சு தளம் உருவாக்கப்பட்டு, சுகாதார அபிவிருத்தியில் நிறுவனத்தின் உருவத்தினை மேம்படுத்தும். அதேவேளை, அனைவரையும் சுகாதார மேம்படுத்தலுக்காக ஈடுபடுத்தும். | ஒக்டோபர் 2018 | டிசம்பர் 2019 |
| 3. முதன்மை பராமரிப்பு மட்டம் வரையில் மருந்து விநியோக முகாமைத்துவ தகவல் முறைமையானது, வழங்குனர்கள் மற்றும் மக்கள் என இருதரப்பினருக்கும் சேமிப்புக்களை வழங்கல் மூலம் தயாரிக்கப்படுதல். | ஒக்டோபர் 2018 | டிசம்பர் 2019 |
| 4. நீடித்த சிறுநீரக நோய் சம்பந்தப்பட்ட உணவுசார் ஆய்வு தொடர்பான தகவலானது ஒழுங்கமைக்கப்பட்ட தொடர்பாடல் உபாயம் ஒன்றின் ஊடாக குடிமக்களுக்கு கிடைக்கச் செய்யப்படும். | ஒக்டோபர் 2018 | ஆகஸ்ட் 2019 |
| 5. பாடசாலைகள் மற்றும் ஏனைய சமூக நிறுவனங்களில் ஆதாரம்சார் மனநல மேம்படுத்தல் தொடர்பாடல் பிரசாரம் ஆரம்பிக்கப்படும். | ஜனவரி 2019 | டிசம்பர் 2019 |

| | | |
|---|---|---|
| **தொடர்புத் தகவல்** | | |
| நடைமுறைப்படுத்தல் நிறுவனத்தில் பொறுப்பில் உள்ள நபரின் பெயர்: | | **Dr.திருமதி H.S.R பெரேரா** |
| பதவி நிலை, திணைக்களம் | | பணிப்பாளர், susiepds@gmail.com<br>கைத்தொலைபேசி: 0777588944 |
| மின்னஞ்சல், தொலைபேசி | | |
| சம்பந்தப்பட்ட ஏனைய செயற்பாட்டாளர்கள் | சம்பந்தப்பட்ட அரச செயற்பாட்டாளர்கள் | சுகாதாரத் திணைக்களம் |
| | CSO, தனியார் துறை, பல்தரப்பு செயற்குழுக்கள் | *சர்வோதயா, மக்கள் சுகாதார முன்னெடுப்பு* |